

திருவள்ளூர் மேற்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் அண்ணாதுரை தயார் இயற்கை எய்தினார். தகவல் அறிந்த மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் நேரில் சென்று மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம் உள்பட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்

# தி.மு.க. - ம.ம.க. இடையேயுள்ளது கொள்கை உறவு!

## எம்.ஹெச்.ஜவாஹிருல்லா தகவல்!



சென்னை, மே. 26-
தி.மு.க.- ம.ம.க. இடையிலான உறவு வெறும் தேர்தல் உறவு மட்டும் அல்ல, அது கொள்கை உறவு என மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம். ஹெச். ஜவாஹிருல்லா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை: கடந்த சில நாள்களாக, தி.மு.க.- ம.ம.க. இடையே பிரிவை உண்டாக்கும் நோக்கில் உண்மை யற்ற தகவல்கள் சமூக ஊடகங்களில் உலா வருகின்றன. தி.மு.க.- ம.ம.க. இடையிலான உறவு, வெறும் தேர்தல் உறவு மட்டுமல்ல; அதைத் தாண்டிய கொள்கை உறவாகும்.

2021, 2026 தேர்தல்களில் தி.மு.க. சின்னத்தில் ம.ம.க. போட்டியிட்டது.

இந்நிலையில், தொடர்ந்து சொந்த சின்னத்தில் போட்டியி டாத கட்சிகளின் பதிவை தேர்தல் ஆணையம் ரத்து செய்த சூழலில், மமகவின் பதிவும் ரத்தானது. இது தொடர்பான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இச்சூழலில் கட்சியின் பதிவை மீட்க தனிச்சின்னத்தில் போட்டியிட வேண்டியது அவசியமாகி விட்டது. இதுவே, மமக உயர்நிலை குழுவில் தீர்மானமாக நிறைவேற்றப் பட்டது.

அதாவது புதிதாக அமைந்துள்ள தவெக அரசில், தனிச்சின்னத்தில் நின்றிருந்தால் அமைச்சர் பதவி பெற்றிருக்கலாம் என்ற ஆதங்கத்தோடு அந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாக திரித்துப் பரப்பப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறு. குடியுரிமைத் திருத்தச் சட்ட எதிர்ப்பு போராட்டங்கள், வக்ஃப் திருத்தச் சட்ட எதிர்ப்பு போராட்டங்கள் தொடங்கி திருப்பரங்குன்றம் விவகாரம் வரை தி.மு.க. உணர்வுபூர்வமாக களத்தில் நின்றது.

இதேபோல், மாநில உரிமை கள் பாதுகாப்பு, தமிழ் மொழி மீதான ஒடுக்குமுறை எதிர்ப்பு உள்ளிட்ட பல தருணங்களில் ஒருமித்த உணர்வோடு தி.மு.க.வுடன் இணைந்து ம.ம.க. களம் கண் டுள்ளது. தமிழகத்தின் நலனைக் காக்க தொடர்ந்து இணைந்து களமாடு வோம் என்று தெரிவித்துள்ளார் எம்.ஹெச்.ஜவாஹிருல்லா.

## சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

கழகத் தலைவர் அவர்களின்அறிவிப்பிற்கிணங்க, சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள மூன்று சட்டமன்ற தொகுதிகளில் சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பின்படி சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள மேட்டூர், எடப்பாடி மற்றும் சங்ககிரி ஆகிய தொகுதிகளில் கள ஆய்வுக் கூட்டம் வழக்கறிஞர் ஏ.சரவணன் மற்றும் நா.இளையராஜா ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

| நாள் | தொகுதி | இடம் |
|---|---|---|
| 29.05.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி | மேட்டூர் | பழனியம்மாள் திருமண மண்டபம், கருமலைக்கூடல், மேட்டூர் ஆர்.எஸ். |
| 30.05.2026 சனிக்கிழமை காலை 10.00 மணி | எடப்பாடி | ஸ்ரீ நடராஜன் மஹால் திருமண மண்டபம், எடப்பாடி |
| 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி | சங்ககிரி | ஜே.பி.ஆர். மஹால் திருமண மண்டபம், வைகுந்தம் |

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் :25.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# பெரம்பலூரில் அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழா!

## தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வெளியிட்டு பேச்சு!

பெரம்பலூர்,மே,26
பெரம்பலூர் மாவட்டம், துறைமங்கலத்தைச் சேர்ந்த துரைசாமி என்பவர் எழுதிய “அம்பேத்கர் சிலை அல்ல எரிமலை” என்ற புத்தக வெளியீட்டு விழா பெரம்பலூரில் உள்ள தனியார் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இதில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு புத்தகத்தை வெளியிட்டார். அப்போது பேசிய அவர், மனிதனாகப் பிறந்து உயர்ந்த தவத்தால், ஒழுக்கத்தால், இறைவனையே எண்ணி வாழ்ந்து இறைவனோடு சேர்ந்து மனித சமுதாயம் உயர்வதற்காக, தான் பயின்ற கல்வியை பயன்படுத்தி மனிதர்களுக்காக பாடுபட்டவர் அம்பேத்கர் என்று புகழாரம் சூட்டினார். தொடர்ந்து அம்பேத்கரின் தியாகத்தை எடுத்துரைத்தார்..

இந்த நூல் வெளியீட்டு விழாவில், திராவிட கழகம் மாவட்ட காப்பாளர் ந.ஆறுமுகம், மாவட்ட தலைவர் சி. தங்கராசு, தி.மு.க. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ .ஜெகதீசன், தி.மு.க. பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார்,

நகர செயலாளர் ம. பிரபாகரன், வி.சி.க. மண்டல செயலாளர் இரா.ஸ்டாலின், இந்தோ அறக்கட்டளை ரெ. செல்வகுமார், தலைமையாசிரியர் சபா.சிலம்பரசன், தி.க. மாவட்ட செயலாளர் மு. விஜயேந்திரன், மாவட்ட துணைத் தலைவர் இரா.சின்னசாமி, பகுத்தறிவாளர் கழகம் மாவட்ட தலைவர் பெ.நடராசன், ஆலத்தூர் ஒன்றிய செயலாளர் அரங்க வேலாயுதம் உள்ளிட்ட தி.மு.க. மற்றும் திராவிடர் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

மதுரை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட மதுரை தெற்கு- மத்தி-வடக்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான கள ஆய்வுக் கூட்டம். கீழ்க்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது என்று மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அறிவிப்பின்படி,

1. மதுரை தெற்கு சட்டமன்ற தொகுதிக்கான கள ஆய்வு 27.5.26 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அண்ணாமலை ஹோட்டல் மாட்டுத்தாவணி அருகில் நடைபெறுகிறது .
2. மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்கான கள ஆய்வு 28.5.26 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அண்ணாமலை ஹோட்டல் மாட்டுத்தாவணி அருகில் நடைபெறுகிறது.
3. மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதிக்கான கள ஆய்வு 29.5.26 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அண்ணாமலை ஹோட்டல் மாட்டுத்தாவணி அருகில் நடைபெறுகிறது.

கழக இளைஞரணி மாநிலத் துணை செயலாளர்
ஜோயல், கழக மருத்துவர் அணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன்
ஆகியோர் கள ஆய்வு செய்கின்றனர்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் :25.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## சட்டமன்றத் தொகுதி கள ஆய்வு!

கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு அறிவிப்பின்படி சென்னை தென்மேற்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக குழுவினர் மாநில மகளிர் அணிச் செயலாளர் **ஹெலன் டேவிட்சன்** மற்றும் **இளமகிழன்** ஆகியோர் அடங்கிய கள ஆய்வுக்குழுவினா சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில், தொகுதி வாரியாக கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவாறு காலை, மாலை ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

| தேதி | கிழமை | தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 29-05-2026 | வெள்ளிக்கிழமை | தியாகராயா நகர் | ஆ.சந்திரசேகர் திருமண மண்டபம் எல்லையம்மன் கோவில் தெரு மேற்கு மாம்பலம் |
| 30-05-2026 | சனிக்கிழமை | மயிலாப்பூர் | P.K மஹால், சித்ரகுளம், மயிலாப்பூர் |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 24.5.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

திருப்பத்தூர் மாவட்டத்தில் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு செய்ய ஆய்வுக் குழுவினர் கீழ்க்கண்டவாறு வருகை தருவதாக மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி அறிவித்துள்ளார். திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய தொகுதிகளில் கள ஆய்வுக்கூட்டம் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் MP, (9444903028), இ.பரந்தாமன் (9150177717) ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

| தேதி (ம) நேரம் | ஒன்றியம், நகரம், பேரூர் | இடம் |
|---|---|---|
| 28.05.2026 வியாழக்கிழமை காலை 09.00 | ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம் | தேர்தல் அலுவலகம் ஜோலார்பேட்டை |
| | திருப்பத்தூர் வடக்கு ஒன்றியம் | |
| | ஜோலார்பேட்டை நகரம் | |
| | ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம் | |
| 28.05.2026 வியாழக்கிழமை மாலை 02.00 | நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம் | சுப்பிரமணி சம்பூர்ணம் மஹால் புதுப்பேட்டை நாட்றம்பள்ளி ரோடு |
| | நாட்றம்பள்ளி பேரூர் | |
| | ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் | |
| | கந்திலி தெற்கு ஒன்றியம் | |
| 29.05.2026 வெள்ளிக்கிழமை காலை 09.00 | திருப்பத்தூர் நகரம் | திருப்பத்தூர் நகர அலுவலகம் |
| | திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் | |
| | திருப்பத்தூர் தெற்கு ஒன்றியம் | |
| 29.05.2026 வெள்ளிக்கிழமை மாலை 02.00 | கந்திலி கிழக்கு ஒன்றியம் | லயன்ஸ் கிளப் கூட்ட அரங்கம் திருப்பத்தூர் |
| | கந்திலி மத்திய ஒன்றியம் | |
| | கந்திலி மேற்கு ஒன்றியம் | |
| 30.05.2026 சனிக்கிழமை காலை 9.00 | வாணியம்பாடி கிழக்கு நகரம் | மாவட்ட அலுவலகம் வாணியம்பாடி |
| | வாணியம்பாடி மேற்கு நகரம் | |
| | நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம் | |
| | உதயேந்திரம் பேரூர் | |
| 30.05.2026 சனிக்கிழமை மாலை 2.00 | ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம் | ஆர்.ஆர்.மஹால் நிம்மியம்பட்டு |
| | ஆலங்காயம் மத்திய ஒன்றியம் | |
| | திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் | |
| | ஆலங்காயம் பேரூர் | |
| 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 | ஆம்பூர் கிழக்கு நகரம் | பிரியா மஹால் ஆம்பூர் |
| | ஆம்பூர் மேற்கு நகரம் | |
| | மாதனூர் மேற்கு ஒன்றியம் | |
| | ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் | |
| 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 | மாதனூர் கிழக்கு ஒன்றியம் | JPR பேலஸ் மாதனூர் |
| | அணைக்கட்டுத் தெற்கு ஒன்றியம் | |
| | குடியாத்தம் வடகிழக்கு ஒன்றியம் | |

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் :25.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தூத்துக்குடி என். பெரியசாமி
### மே 26 (2017)



ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தில் 1960ஆம் ஆண்டு முதல் கழக உறுப்பினராக பதிவு செய்து கொண்ட இவர், தொடர்ந்து தூத்துக்குடி நகருக்கு உட்பட்ட வட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்து, பின்னர் மாவட்டக் கழக பிரதிநிதியாக 1977ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். அதனைத் தொடர்ந்து 1982 முதல் 1987 வரை தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும், அதன்பின்னர், தூத்துக்குடி மாவட்டக் கழகச் செயலாளராக 1987 முதல்.தொடர்ந்து தனது இறுதி காலம் வரை தலைவர் கலைஞர் அவர்களின் தடம் மாறாத தொண்டராகப் கழகப் பணியாற்றியவர். கழகப் பணிகளோடு, தொழிலாளர் நலனினும் அதிக அக்கறை கொண்ட இவர் தூத்துக்குடி மாவட்டத்தில் 36 தொழிற் சங்கங்களில் தலைவராக இருந்தவர்.

தூத்துக்குடி நகர்மன்றத் தலைவராகவும் – 1989,1996 ஆண்டுகளில் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று, இரு முறை சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றினார்.

1993ஆம் ஆண்டு கழகத்திற்கு சோதனை வந்த காலத்தில், தூத்துக்குடி மாவட்டத்தை கழகக் கோட்டையாக காத்து நின்றவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் மேல் கொண்ட அளவு கடந்த பற்றின் காரணமாக, தலைவர் கலைஞர் அவர்களே, இவரை “என்னுடைய முரட்டு பக்தன்” என்று மனமாரப் பாராட்டியவர். 2016ல் தலைமைக் கழகத்தின் சார்பில் வழங்கப்படும் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்களால் பெற்றவர். “என் மீது தனிப்பட்ட பாசத்தையும் வைத்திருந்தவர் அண்ணன் தூத்துக்குடி பெரியசாமி அவர்கள் என்பதை நினைக்கும் போது, பெருமைமிக்க தொண்டரை இழந்த சோகம் எங்களை உலுக்கிக் கொண்டிருக்கிறது.” என்று கழகச் செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**